**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.08/2025 மற்றும் 09/2025**

in

**அசல் வழக்கு எண்.406/2015**

சாந்தம்மாள் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தங்கமணி
2. கடற்கன்னி
3. பரமசிவன் (இறந்தவர்)
4. சின்னமாரியப்பன் (இறந்தவர்)
5. சண்முகவேல்
6. ஜெபசிங்
7. பால்ராஜ்
8. வேதமாணிக்கம்
9. அப்பாத்துரை
10. தாயம்மாள்
11. நாகராஜ்
12. நாகையா
13. நாகப்பன்
14. நாகேந்திரன்
15. நாகர் ....1 முதல் 15 எதிர்மனுதார்கள்/
1 முதல் 15 பிரதிவாதிகள்

16. அந்தோணியம்மாள்
17. மகேஸ்வரி
18. ராஜேஸ்
19. அருண் ....16 முதல் 19 எதிர்மனுதார்கள்/
உத்தேச 16 முதல் 19 பிரதிவாதிகள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.13 16:06:08 +0530

இம்மனுக்களானது 29.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் காலம்சென்றவிட்ட நிலையிலும், 5 முதல் 15 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கிலேயே ஒருதலைபட்சமாகியுள்ள நிலையிலும், 16 முதல் 19 எதிர்மனுதாரர்கள் I.A.No.7/2025 மனுவில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## <u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 9(2) மற்றும் கட்டளை 22 விதி 4 பிரிவு 151-ன் கீழ், இவ்வழக்கின் 20.05.2024 ம் தேதியில் இறந்துபோன 4 ம் பிரதிவாதிக்கு 16 முதல் 19 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் காலதாமதத்தினால் ஏற்பட்ட அபேட்மெண்டை ரத்து செய்து, 16 முதல் 19 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 16 முதல் 19 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1)மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.08/2025 மற்றும் 09/2025-ன் மனுக்களின் சுருக்கம்:-</u>**

மனுதார் அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 4 ம் பிரதிவாதி சின்னமாரியப்பன் என்பவர் 20.05.2024 தேதியில் இறந்துவிட்டார் என்றும், தனக்கு அதிக வயதாகிவிட்டதாலும், வயோகத்தின் காரணமாகவும், உடல்நலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.13 16:06:16 +0530

என்றும், அதனால் மேற்படியார் இறந்து விபரம் தனக்கு தெரியாது என்றும், தற்போது தான் தனக்கு தெரியவந்தது என்றும், மேலும் இறந்துபோன 4ம் பிரதிவாதியின் வாரிசு விபரம் மற்றும் பெயர், வயது, விபரமும் விசாரித்து அறிவதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், அதனால் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு உரிய காலத்தில் வழக்கறிஞரிடம் தகவல் கொடுத்து வாரிசு நடவடிக்கை எடுக்க இயலாமல் போய்விட்டது என்றும், இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு, 16ம் எதிர்மனுதாரர் மனைவி என்றும், 17 முதல் 19 எதிர்மனுதாரர்கள் மக்களாவார்கள் என்றும், மேற்படி 16 முதல் 19 எதிர்மனுதாரர்கள் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசுகள் என்றும், இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு, வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் 240 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி காலதாமதம் மனப்பூர்வமாக ஏற்பட்டதில்லை என்றும், தன்னை அறியாமல் தெய்வாதீனமாக ஏற்பட்டுவிட்டது என்றும், இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு வாரிசுகள் சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்கவும், வாரிசுகள் சேர்க்கவும், தனியாக மனுக்கள் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆகையால், இவ்வழக்கின் 20.05.2024ம் தேதியில் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு 16 முதல் 19 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் காலதாமதத்தினால் ஏற்பட்ட அபேட்மெண்டை ரத்து செய்து, 16 முதல் 19 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 16 முதல் 19 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

3) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.13 16:06:23 +0530

4) இம்மனுக்களானது மனுதாரர்/வாதியால், இவ்வழக்கின் 20.05.2024ம் தேதியில் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு 16 முதல் 19 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக கட்சி சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் காலதாமதத்தினால் ஏற்பட்ட அபேட்மெண்டை ரத்து செய்து, 16 முதல் 19 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 16 முதல் 19 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்துக் கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இம்மனுக்களின் மனுதாரர் தரப்பில், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 4ம் பிரதிவாதி சின்னமாரியப்பன் என்பவர் 20.05.2024 தேதியில் இறந்துவிட்டார் என்றும், தனக்கு அதிக வயதாகிவிட்டதாலும், வயோகத்தின் காரணமாகவும், உடல்நலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் மேற்படியார் இறந்து விபரம் தனக்கு தெரியாது என்றும், தற்போது தான் தனக்கு தெரியவந்தது என்றும், மேலும் இறந்துபோன 4ம் பிரதிவாதியின் வாரிசு விபரம் மற்றும் பெயர், வயது, விபரமும் விசாரித்து அறிவதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், அதனால் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு உரிய காலத்தில் வழக்கறிஞரிடம் தகவல் கொடுத்து வாரிசு நடவடிக்கை எடுக்க இயலாமல் போய்விட்டது என்றும், இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு, 16ம் எதிர்மனுதாரர் மனைவி என்றும், 17 முதல் 19 எதிர்மனுதாரர்கள் மக்களாவார்கள் என்றும், மேற்படி 16 முதல் 19 எதிர்மனுதாரர்கள் இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான வாரிசுகள் என்றும், இறந்துபோன 4ம் பிரதிவாதிக்கு, வாரிசு சேர்க்க நடவடிக்கை எடுப்பதில் 240 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.13 16:06:30 +0530

6) மனுதாரரின் மனுவை மறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு இறந்துபோன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளான 16 முதல் 19 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியம் என்பதால் இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**7) இறுதியாக**

**இ.ம.எண்.08/2025**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**இ.ம.எண்.09/2025**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.13 16:06:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.13 16:06:56 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.08/2025 and
I.A.No.09/2025
in
O.S.No.406/2015
**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 13.08.2025**